# நல்ல மேய்ப்பன்

## நானே நல்ல மேய்ப்பன் (யோ 10 : 11)




பரிசுத்த வேதாகமத்தில் சபையானது பல பெயர்களை பெற்றிருந்தாலும், அவற்றில் முக்கியமானது தேவனுடைய மந்தை (ஆட்டு மந்தை) என்பதாகும். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களும் தேவ மந்தையாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக ஆட்டு மந்தையானது தன்னிசையாக செயல்பட கூடியதாயிராமல், எப்பொழுதும் ஒரு மேய்ப்பனுடைய கண்காணிப்பின் கீழ், அவனுடைய போஷிப்பின் கீழ், பாதுகாப்பின் கீழ் செயல்படகூடியதாக உள்ளது. அதுபோலவே தேவனுடைய ஜனங்களும் எப்பொழுதும் தேவனுடைய ஆளுகையின் கீழ், பாதுகாப்பின் கீழ், போஷிப்பின் கீழ் செயல்படகூடியவர்கள்.

ஆகிலும், பழைய ஏற்பாட்டில் தேவன் தம்முடைய ஜனங்களை மேய்க்கும்படியாக மோசே, தாவீது போன்ற சில தேவ மனிதர்களை தெரிந்தெடுத்தார். புதிய ஏற்பாட்டிலும் மேய்ப்பர் ஊழியத்தை ஏற்படுத்தி அதின் மூலம் சபை மேய்ப்பர்கள் (ஆயர்கள்) வழியாக தம்முடைய சபையை போஷித்து, பாதுகாத்து நடத்தி வருகிறார். இப்பொழுது ஒரு

மேய்ப்பனின் குணநலங்களை குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **யோவான் 10ஆம்** அதிகாரத்தில் கூறியதை காண்போம். **ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை நல்ல மேய்ப்பன் என்று கூறுகிறார் (யோ 10 : 11).** மேலும் பிரதான மேய்ப்பரும் அவரே. எனவே அவர் கூறும் மேய்ப்பனின் குணநலங்களை காண்போம்.

**"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்வழியாய்ப் பிரவேசிக்கிறவனோ ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான்" (யோ 10:1,2)**, மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மேய்ப்பனே அவற்றை நேரடியாக சந்திக்க கூடியவனாயிருக்கிறான். நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை நேரடியாக நம்முடைய வாழ்க்கையில் சந்தித்து, நம்மை தம்முடைய மந்தையாக சேர்த்துகொண்டார்.

தேவனுடைய நற்செய்தியை அறிவித்து மக்களை சபையாக கூட்டிச் சேர்க்கும் மேய்ப்பர் ஊழியத்தை செய்வோரும் அப்படியாகவே மக்களை நேரடியாக (வெளிப்படையாக) சந்தித்து, எந்த ஊள் நோக்கமும் இல்லாமல் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பிற்காகவே அவர்களை ஆண்டவரண்டையில் சபையாக கூட்டி சேர்கின்றனர். ஆனால் வேறுவிதமாய் மக்களை தம் பக்கம் இழுக்கும் நோக்கத்துடன் செயல்படும் மனிதரோ, கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் (யோ 10:2). எனவே இவர்கள் நல்ல மேய்ப்பர்களாயிராமல், கள்ள மேய்ப்பரும், ஆடுகளையே கொள்ளையிடுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.

**"வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப்**

**பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம் என்றார்" (யோ 10:3,4,5).** மேற்கண்ட வசனங்களில் நாம் காண்கிறபடி, ஆடுகளின் மந்தை அண்டை வந்த நல்ல மேய்ப்பர் அவற்றை பேர் சொல்லி அழைக்கிறார். அவைகளும் அவருடைய சத்தத்தை அறிந்து அவருக்கு பின்செல்லுகின்றன. இவ்வாறாக ஆண்டவரும் நம்மையும் பெயர்சொல்லி அழைத்து நீ என்னுடையவன் என்று நம்மை சேர்த்துக்கொண்டார்.

நாமும் அவருடைய சத்தத்தை அறிந்தவர்களாய் இருப்போமானால், அவருடைய சத்தத்திற்கு (வார்த்தைக்கு) மாத்திரம் செவிக்கொடுத்து அவர் பின்சென்று, மற்ற உலக சத்தங்களை நம்மை விட்டு விலக்கிப்போடுவோம். பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை போலவே, அவருடைய ஊழியர்களான மேய்ப்பர்களும், தங்களுக்கென்று தேவன் கொடுத்த மந்தையின் நிலையை நன்கு அறிந்தவர்களாய், மந்தையின் தேவைகளை உணர்ந்தவர்களாய், பெயர் சொல்லி அழைப்பதுபோல, தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு ஆத்துமாவின் மேலும் கரிசனை உள்ளவர்களாய் இருக்க வேண்டும். அதேவேளையில், மந்தையோடு இப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவும், கரிசனையும் இல்லாமல் அவற்றை மேய்க்க முற்படுகிறவர்களை விட்டு அவை ஓடிப்போம்.

**"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோ 10:10),** மேற்கண்ட வசனத்தில் நாம் காண்கிறபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் (மறுபிறப்படைந்து பெற்ற புதிய ஜீவன்), அது பரிபூரணப்படவும் (கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சி) வந்தேன் என்கிறார். அதுபோலவே தேவ ஊழியக்காரரான, மேய்ப்பர்களும் தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட மந்தை ஆவிக்குரிய ஜீவனோடு காணப்படவும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியாகிய பூரண புருஷர்களாய் மாறவும் தக்கதாய் அவற்றை மேய்க்க வேண்டும். ஆனால் பொல்லாத மேய்ப்பகளின் மூலமாகவோ, ஆடுகளின் ஜீவன் (சபை ஆத்துமாக்களின் ஜீவன்) கொள்ளையாடப்பட்டு, பரிபூரணப்படுவதற்கு பதிலாக (கிறிஸ்துவின்

நிறைவான வளர்ச்சி), உலக வேஷத்தை தரித்துக் கொண்டவர்களாய் மாற்றப்படுகின்றனர்.

எல்லாவற்றிற்க்கும் மேலாக **யோ 10:11 இல் "நானே நல்ல மேய்ப்பன்: நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்"** என்று ஆண்டவர் கூறியுள்ளபடி, நல்ல மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய ஆடுகளாகிய நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். இவ்வாறாக ஊழியத்தை செய்கிற மேய்ப்பர்களும் தங்களிடம் தேவன் தந்த மந்தையை பாதுகாத்து, அவற்றின் ஜீவனை காப்பாற்ற தம் ஜீவனையும் (எல்லாவற்றையும் இழக்க) கொடுக்க ஆயத்தமாயிருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஊழியத்தை செய்த அநேக தேவ பிள்ளைகளை நாம் சபை வரலாற்றில் காண்கிறோம். அவர்களுடைய தியாகமான ஊழியத்தினால் இன்று எத்தனையோ இடங்களில் தேவனுக்கு மகிமையாய் சபைகள் எழும்பியிருக்கிறதை நாம் காணலாம். இவ்வாறாக அவர்கள் ஊழியத்தை செய்வதற்கு காரணம், அவர்களின் பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மந்தைக்காக தன் ஜீவனையே கொடுத்திருக்கிறார்.

ஆனால், வெறும் கூலிக்காகவே (ஆதாயத்திற்காகவே) மந்தையை மேய்க்க வந்த பொல்லாத மேய்ப்பன், ஓநாய் (பாடுகள், கள்ள உபதேசம்) வருகிறதை கண்டு ஆடுகளை (சபையை) விட்டு ஓடிப்போகிறான் (கவலைப்படாதிருக்கிறான்). **"அப்பொழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்" (யோ 10:12,13).**

எனவே சபை ஊழியத்தை (மேய்ப்பர் ஊழியத்தை) செய்ய அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து, தாங்கள் தங்களுக்காக சபையை மேய்க்காமல், தங்களிடத்தில் கணக்கு கேட்கப்போகிற பிரதான மேய்ப்பராகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காகவே, சபையாகிய மந்தையை மேய்த்து, ஆண்டவர் வருகையில் அவரண்டை சபையை ஒப்படைக்கிறவர்களாய் காணப்பட வேண்டும். **"அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோ 10:16).**

மேலும் மேய்ப்பர் ஊழியமாகிய சபை ஊழியத்தில் மற்ற ஊழியங்களாகிய சுவிசேஷம் சொல்வதும், போதகம் செய்வதும் அடங்கியிருக்கிறது. மேலும் சபையை குறித்த ஒரு தீர்க்கதரிசன பார்வை, மேய்ப்பர் ஊழியத்தை செய்பவர்க்கு தேவையாயிருக்கிறது. இவை எல்லாவற்றையும் ஒருங்கே செய்யும் பொழுது, அது அப்போஸ்தல ஊழியத்திற்கு வழியாகவும் இருக்கிறது.

எல்லாவற்றிற்க்கும் மேலாக ஒரு நல்ல மேய்ப்பனுக்கு **"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்" (சங் 23:1)** என்ற தாவீதின் அனுபவம் வேண்டும். ஏனெனில் இந்த தாவீதையே **"கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை (தாவீதை), தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக, (கர்த்தரே) அழைத்துக்கொண்டுவந்தார்" (சங் 78:71)**. எனவே நல்ல மேய்ப்பனானவன், தன்னுடைய கையில் கொடுக்கப்பட்ட மந்தையை உண்மையுடன் மேய்த்து பிரதான மேய்ப்பராகிய ஆண்டவரண்டை கூட்டிச்சேர்பானாக. **"அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" (1 பேதுரு 5:4)**. வேதத்தில் ஆண்டவர் பல இடங்களில் மேய்ப்பகளை குறித்து கூறியுள்ளார், **"அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" (யோ 21:25)** ஆமென்.